[1979 மார்ச் 22

தூத்துக்குடி இலங்கை கப்பல் போக்குவரத்து

வினா எண். 510—திரு. ந. தனசேகரன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து இலங்கைக்கு பயணிகள், மற்றும் சரக்கு கப்பல் விடக்கோரி, கோரிக்கை ஏதும் அரசிற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் இது குறித்து மத்திய அரசுக்குப் பரிந்துரை ஏதும் செய்யப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

திரு. ந. தனசேகரன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலில் ஒரேயடியாக இல்லை என்று சொல்கிறார்கள். டியுடிகொரின் சிலோன் கரன்ட், எக்ஸ்போர்ட்டர்ஸ் அண்டு இம்போர்ட்டர்ஸ் சேம்பர் அவர்களின் வேண்டுகோளை அமைச்சர் அவர்களிடத்தில் நேரடியாக நானே அளித்து, அது ஆய்வும் செய்யப்பட்டு, ஆய்வில் முறைகேடாக நடத்தப்பட்டு அங்கே உள்ள தோணித் தொழில் நடத்தக்கூடியவர்கள் அதைத் தடுக்கும் முகமாக வேறு ஏற்பாடுகளைச் செய்து, இங்கே அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா ? எனவே இலங்கைக்கு கப்பல் போக்குவரத்தை உடனே அரசு ஏற்று நடத்த முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, 1965—66-லேயே தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையே பயணிகள் கப்பல்கள் நிறுத்தப்பட்டு விட்டன. அது நஷ்டத்தில் இயங்கிய காரணத்தால் நிறுத்தப்பட்டது. தற்போது ராமேஸ்வரத்திற்கும் இலங்கைக்கும் இடையே கப்பல் போக்குவரத்து நடந்து வருகிறது. தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையே நீராவிக் கப்பல் போக்குவரத்து ஏற்படுத்தினால் ராமேஸ்வரம் கொழும்பு கப்பல் போக்குவரத்து பாதிக்கும் என்று கப்பல் போக்குவரத்து துறையைச் சேர்ந்த பிரிவினர் கருத்து தெரிவித்து இருக்கிறார்கள். சரக்குக் கப்பல்களைப் பொறுத்த

1979 மார்ச் 22]

வரையில், நீராவிக் கப்பல் விடுகிற காரணத்தால் அதிக செல வாகும் என்ற அடிப்படையில் அந்த சரக்குப் போக்குவரத்தைப் பொறுத்தவரையில் படகுக் கப்பல் போதும் என்று கூறப்பட் டது. பாய்மரக் கப்பல்கள் போதும் என்று கருதப்பட்டது. பாய்மரக் கப்பல்கள் மூலமாக இலங்கைக்கும் தமிழகத்திற்கும் இடையே சரக்குக் கப்பல் போக்குவரத்து மிகவும் சிக்கனமாக இருப்பதாலும், பாய்மரக் கப்பல் மூலம் சரக்குகள் கொண்டு செல்லும் பணியில் பல தொழிலாளர்கள் இருப்பதாலும், அவர் களிடையே வேலை இல்லாத் திண்டாட்டம் நீராவிக் கப்பல் விடுவதால் ஏற்படும், அவர்கள் பாதிப்புக்குள்ளாவார்கள் என்ற காரணத்தாலும், அந்த முடிவிற்கு வரப்பட்டது. தூத்துக்குடி துறைமுகம் 1-4-79 முதல் மத்திய அரசின் அதிகாரத்தின் கீழ் வர இருப்பதால், பெரிய அளவில் சரக்குப் போக்குவரத்து செய்யலாமா என்பது குறித்து மத்திய அரசு ஆய்வு நடத்த வேண்டும் என தமிழக அரசு பரிந்துரை செய்யும்.

திரு. ந. தனசேகரன்: தலைவர் அவர்களே, ஆய்வுகள் முறையாக நடத்தப்படவில்லை என்பது என்னுடைய குற்றச் சாட்டு. இனியாவது மீண்டும் ஆய்வு நடத்தப்பட்டு அங்கே அது செயல்படுத்தப்படுமா? 1969-ம் ஆண்டு ஏற்றுமதி செய் வதற்கும், 1979-ம் ஆண்டு, இன்றைக்கு ஏற்றுமதி செய்வதற்கும் வித்தியாசம் 10 சதவீதம் என்பது 100 சதவீதம் என்ற அளவில் உயர்ந்து இருக்கிறது. இதை நினைவில் கொண்டு கப்பல்கள் விடுவதற்கு அரசு அந்தக் கோரிக்கையை ஏற்று நடத்த முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, தூத்துக்குடி துறைமுகத்தைச் சேர்ந்த மத்திய அரசு அதிகாரி களும், மாநில அரசு அதிகாரிகளும் அங்கே ஆய்வினை செம்மை யாகத்தான் நடத்தி இருக்கிறார்கள் என்று அரசு கருதுகிறது. காரணம் சரக்குப் போக்குவரத்தைப் பொறுத்தவரையில் பார்த் தால் 1975 முதல் 1979 வரையில் படிப்படியாக அது உயர்ந்து கொண்டுதான் இருக்கிறது. அது உண்மை தான், ஆனால் பாய்மரக் கப்பல்களைப் பயன்படுத்தி அந்த உயர்வை சமா ளிக்க முடியும் என்று பாய்மரக் கப்பல் உரிமையாளர்கள் தெரி வித்ததோடு அல்லாமல், அங்கே பணிபுரியும் தொழிலாளர்களுக் கும் பாதிப்பு ஏற்பட்டு விடக்கூடாது என்ற அடிப்படையில் தற் போது அதை பரிசீலிக்கவில்லை.

CLASSES FOR FARMERS

*Q. No. 511—THIRU K. ABDUL LATHEEF: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state:

(a) whether courses for the farmers have been introduced in the state by the Veterinary College' and

(b) if so, the details thereof?